IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# அகநானூறு தோழிக்கூற்று உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

**V.Murugu**
ஆய்வாளர்
Research Scholar
தமிழ் உயராய்வு மையம்
யாத்வர் கல்லூரி
மதுரை – 14

**ஆய்வுச் சுருக்கம்**

உள்ளத்து உணர்வுகளைக் காதலாக்கி, களவு வாழ்வில் மகிழ்தலும், அக்களவு கற்பில் நிறைவுறுதலும் அகவாழ்வாக அமைகின்றது. அகவாழ்வை வலியுறுத்தும் அக இலக்கியம் பல அகத்துறைகளால் ஆனது. அவை அறத்தொடு நிற்றல், வரைவு கடாவுதல், பொருள்வயிற்பிரிதல், நெஞ்சொடு கிளத்தல், வினைமுற்றியத் தலைமகன் தேர்ப்பாகனுக்குக் கூறல், மகட்போக்கியதாய் சொல்லுதல், வாயிற்மறுத்தல், குறியிடம் மறுத்தல், உடன்போக்கு, திருமணம், அம்பலும் அலரும், ஆற்றாமை மீதூரல், ஆற்றுவித்தல் என்னும் துறைகளால் ஆனது. 'ஆற்றுவித்தல் என்பது சங்க அகப்பாடல்களின் வாயிலாக அறியப்படும் தமிழ்மாந்தர்களின் காதல் வாழ்க்கைத் தொடர்பான நிகழ்ச்சிக் கூறுகளில் ஒன்றாகும்" என்ற கூற்று இன்றளவும் உண்மைத் தன்மையுடன் வலிமை வாய்ந்ததாக விளங்குகின்றது.

**முன்னுரை**

இக்காலத்தில் தோழி தலைவியை ஆற்றுவிப்பாள். இதுவே ஆற்றுவித்தல் என்னும் துறைக்கு அடிப்படையான காரணமாகும்". தலைவனைப் பிரிந்து வாழும் தலைவி, தலைவனின் வருகைக்காக ஆற்றியிருக்கும் பொழுது, தலைவன் குறித்தகாலத்தில் வராது இருப்பின் தலைவியது ஆற்றாமை மீதூரும்.

அப்பொழுது, தோழி தலைவியை ஆற்றுவித்துத் தலைவனது குணநலன்களை எடுத்துக் கூறுவாள். ஆற்றாமை மீதுரும் பொழுது தலைவி தன்னைத்தானே ஆற்றுவித்தலும், தோழி தலைவியை ஆற்றுவித்தலும் நிகழும். மேலும் தலைவி தோழியை ஆற்றுவித்தல் என்பதும் இத்துறையில் நிகழும் என்பது வெளிப்படை.

**தோழி தலைவஅறத்தோடு நிற்றல்**

அறத்தொடு நிற்கும் காலத்தன்றி அறத்தியல் மரபிலள் தோழி என்ப (தொல்காப்பியம், பொருளதிகாரம் 12).

அகத்திணைப் பாடல்கள் மிகவும் இனிமையானவை. அவை காதல் சூழ்நிலைப் பாடல்கள் மட்டும் இல்லை. அவற்றில் நிறையச் சுவையான உவமைகள் உண்டு. அவற்றில் சரித்திரக் குறிப்புகளும் இருக்கின்றன. மேலும் நம்மை சிந்திக்கச் செய்யும் சுவையான உள்ளுறைகளும் மிகுதியாக உள்ளன. புலவர்கள் இயற்கையை உபயோகித்து மனித உணர்ச்சிகளையும் சூழ்நிலைகளையும் உள்ளுறைகள் மூலம் நமக்குச் செம்மையாக உணர்த்துகின்றனர். ஐந்திணைகளான குறிஞ்சி, மருதம், முல்லை, பாலை, நெய்தல் ஆகியவற்றோடு, கைக்கிளையையும் பெருந்திணையையும் சேர்த்து மொத்தம் ஏழுத் திணைகளைக் கொண்டது அகத்திணை.

அகத்திணை களவு கற்பு என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது. இவற்றை இணைப்பதே அறத்தோடு நிற்றல். தலைவன் தலைவியிடையே இருக்கும் மறை ஒழுக்கத்தை உலகம் அறிய வாழும் கற்பு ஒழுக்கமாக மாற்றுவதற்காக நிகழும் ஒரு செயலே அறத்தோடு நிற்றலாகும். தலைவியைத் தலைவனொடு திருமணத்தில் இணைக்க இது உதவும். தோழி செவிலித்தாயிடம் தலைவியின் காதலைப் பற்றிக் எடுத்துக் கூறி திருமணத்தை வேண்டுவாள். இந்தப் பாடல்களை நாம் குறிஞ்சித் திணையில் காணலாம்.

குறிஞ்சிப்பாட்டு என்ற பத்துப்பாட்டு பாடல் முழுக்கவும் அறத்தொடு நிற்றல் சூழ்நிலை உடையது ஆகும். அது 261 வரிகளைக் கொண்டது. புலவர் கபிலர் ஆரிய மன்னன் பிரகத்தனுக்கு தமிழரின் களவு ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவதற்காக அதை எழுதினார் என்பது மரபு முறைப்படி நமக்கு வந்த தகவல். இந்தப் பாடலில் கற்பு ஒழுக்கத்தைப் பற்றியும் குறிப்பு உள்ளது.

தோழி மிகவும் திறமையாக, செவிலித்தாயிடம், தலைவி தலைவன் மேல் கொண்ட அன்பைப் பற்றியும், தலைவன் தலைவியை இரவு நேரத்தில் தனியே வந்துச் சந்திப்பதால் அவனுக்கு ஏற்படும் தொல்லைகளைப் பற்றியும் கூறி, திருமணத்தை வேண்டுவாள். சில பாடல்களை நாம் இப்பொழுதுக் காணலாம்.

இந்தப் பாடலில், தோழி, தலைவியை தன் மகளாக எண்ணும் செவிலித்தாயிடம் இவ்வாறு கூறி, பேச்சைத் துவங்குகின்றாள்,

***அன்னாய் வாழி! வேண்டு அன்னை! நின் மகள்***
***பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு***
***நனி பசந்தனள் என வினவுதி (அகநானூறு 48, வரிகள் 1-3)***

“அம்மா, நீ நீடு வாழ்வாயாக! உன்னை வேண்டுகின்றேன்! உன்னுடைய மகள் ஏன் பாலைக் குடிக்க மறுக்கின்றாள், துன்பத்தோடு (பழங்கண் ஸ்ரீ துன்பம்) இருக்கின்றாள் பசலை உடலுடன் என்று நீ என்னைக் கேட்கின்றாய்.”

அதேப் பாடலில், தலைவன் வேட்டையாடி வந்தப் பொழுது தலைவனும் தலைவியும் எவ்வாறு சந்தித்தார்கள் என்பதை செவிலித்தாயிடம் விவரித்து விட்டு இறுதியில் இவ்வாறு துணிவோடுக் கூறுகின்றாள் தோழி,

அதன் அளவு உண்டு கோள் மதி வல்லோர்க்கே (அகநானூறு 48, வரி 26)

“அதைப் (தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே உள்ள அன்பை) புரிந்துக் கொள்வது அறிவு உள்ளார்க்கு மட்டுமே இயலும்.”

இந்தப் பாடலில் செவிலித்தாயிடம் தோழி இவ்வாறுக் கூறுகின்றாள்,

***அன்னை அறியினும் அறிக அலர் வாய்***
***அம்மென் சேரி கேட்பினும் கேட்க***
***பிறிது ஒன்று இன்மை அறியக் கூறிக்***
***கொடும் சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்***
***கடுஞ்சூள் தருகுவன் நினக்கே (அகநானூறு 110, வரிகள் 1-5)***

“தலைவியின் தாய்க்கு தெரிந்தாலும் தெரியட்டும்! வம்புப் பேச்சு பேசும் அழகிய மென்மையானவர்களின் தெருவில் கேட்டாலும் கேட்கட்டும்! இல்லாத எதையும் நான் உன்னிடம் கூறாமல், வளைந்த சுழல்களையுடைய கடலையுடைய புகார் (பூம்புகார்) நகரில் உள்ள தெய்வத்தின் மேல் உறுதிமொழி தருவேன் உனக்கு.”

அதேப் பாடலில், தலைவியும் தானும் மண் வீட்டைக் கட்டி விளையாடியப் பொழுது தலைவனைச் சந்தித்த சூழ்நிலையை தோழி செவிலித்தாய்க்குக் கூறுகின்றாள்,

***சிற்றில் இழைத்தும் சிறு சோறு குவைஇயும்***
***வருந்திய வருத்தம் தீர யாம் சிறிது***
***இருந்தனமாக எய்த வந்து***
***தட மென் பணைத்தோள் மட நல்லீரோ***
***எல்லும் எல்லின்று அசைவு மிக உடையேன்***
***மெல் இலைப் பரப்பின் விருந்து உண்டு யானும் இக்***
***கல்லென் சிறுகுடித் தங்கின் மற்று எவனோ***
***என மொழிந்தனனே ஒருவன் (அகநானூறு 110, வரிகள் 7-14)***

நாங்கள் மண் வீட்டைக் கட்டி, விளையாட்டுச் சோற்றைச் சமைத்து பின் அலுப்புத் தீர கொஞ்சம் இளைப்பாறினோம். அப்பொழுது தலைவன் எங்களிடம் வந்து, “மூங்கில் போன்ற தோள்களையுடைய அழகியவர்களே! பகல் வெளிச்சம் அகன்று விட்டது. நான் தளர்வாக இருக்கின்றேன். இலையில் உணவு உண்டு விட்டு உங்கள் சிற்றில்லில் நான் தங்கலாமா?” என்றுக் கேட்டான்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, குறித்தப் பருவத்தில் வராது இருப்பின் தலைவியது ஆற்றாமைமீதுரும். அப்பொழுது தோழி தலைவியை ஆற்றுவிப்பாள். தோழி, தலைவியை ஆற்றுவிக்கும் பொழுது தலைவனது அன்பைக் கூறியும், பருவ வரவைக் கூறியும், வம்ப மாரியின் தன்மையினைக் கூறியும், பொருளீட்டுதலின் நோக்கம் கூறியும், நிமித்தம் கூறியும், அலரின் தன்மையினைக் கூறியும், தமர் பற்றிக் கூறியும் ஆற்றுவிப்பாள்.

இதுவே ஆற்றுவித்தலுக்குரிய துறைகளாகும். ஆற்றுவித்தல் என்பது சில சூழல்களில் வற்புறுத்தலாகவும் அமைகின்றது. களவு வாழ்க்கையைவிட கற்பு வாழ்க்கையில்தான் ஆற்றுவித்தலுக்குரிய பாடல்கள் அதிகமாக உள்ளன. களவில் தோழி, தலைவியை ஆற்றுவிக்கும் பொழுது, „தலைவன் உன்னை விரைவில் வரைந்து கொள்வான் என்று கூறி ஆற்றுவிக்கின்றாள். கற்பில் தலைவன் விரைவில் மீண்டு வருவான் வருந்தாதே… என்று கூறி ஆற்றுவிக்கின்றாள்.

**வெறியாட்டு**

சங்க இலக்கியம் தமிழர்களின் தொல்வரலாற்றிற் கான ஆவணமாக இருப்பது. இலக்கியம் என்ற நிலையைக் கடந்து மானிடவியல், வரலாற்றியல், ஒப்பியல் உள்ளிட்ட வாசிப்புகளுக்கும் இப்பிரதியானது இடமளிக்கின்றது. காலந்தோறுமான பன்முகப்பட்ட வாசிப்பினையும் பெற்றுவருகின்றது. சங்கப் பாடல்களில் பல்வேறு சடங்குகள் இடம்பெற்றுள்ளன. பெண்சார்ந்த சடங்குகளுள் வெறியாடல் குறிப்பிடத்தக்கது. இந்த வெறியாடல் களவுக் காதலில் ஈடுபட்டு அதன் விளைவாக மெலிவு ஏற்பட்ட பெண்களுக்கு நிகழ்த்தப் படுவது. மேலும் இப்பாடல் வெறியாடலுக்குரிய குறிஞ்சித்திணை சார்ந்து அமையாது முல்லைத் திணையில் வினைமுற்றி மீளும் தலைவனின் கூற்றாக அமைந்துள்ளது. இங்கு வெறியயரும் களம் உவமைக்காக எடுத்தாளப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. பிற முப்பத்தியோரு பாடல்களும் ஆண்பாற் புலவர்களால் பெண்நிலையிலிருந்து பாடப்பட்டவை. அகநானூற்றில் 11 பாடல்கள் என்ற நிலையில் வெறியாடல் குறித்த பதிவுகள் காணக்கிடைக்கின்றன. அகநானூற்றுப் பாடல்கள் மூன்று பகுதிகளைக் கொண்டமைகின்றன. முதற்பகுதி தலைவனின் நாடு அல்லது இறைச்சிப் பொருள் குறித்ததாகவும், சில இடங்களில் தலைவியின் மெலிவிற்கான காரணத்தைக் கூறுவதாகவும் இரண்டாம் பகுதி வெறியாடலை மையமிட்டும், மூன்றாம் பகுதி வெறியாடலினால் நேர்ந்த விளைவு குறித்ததாகவும் அமைகின்றது.

அகநானூற்றில் இரண்டு என வெறியாடல் தொடர்பாகப் பாடிய மூன்று பாடல் களுக்காக மட்டுமே காமக்கண்ணியார் சிறப்புப் பெயர் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு இவர் காட்சிப்படுத்தியுள்ள வெறியாடல் நிகழ்வும் காரணமாக இருக்கலாம். சங்க இலக்கியத்தில் வெறியாடல், காமக்கண்ணியாரின் பாடல்கள் குறித்த கருத்துகளைக் கீழ்க்கண்ட நிலைகளில் தொகுத்துக் கொள்ளலாம்.

சங்க இலக்கியப் பிரதிகளில் வெறியாடல் என்ற நிகழ்வு பெற்றிருக்கும் முக்கியத்துவமும் அதன் சடங்கு முறைகளும். வெறியாடல் குறித்த தொல் இலக்கணமான தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பதிவு களும் அதற்கு உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டியுள்ள சங்கச் சான்றுகளும்.

மேற்குறித்த நிலைகளில் இருந்து காமக் கண்ணியாரின் பாடல்கள் மாறுபட்டுள்ள ஒத்துள்ள இடங்களும் வெறியாடலின் வழி விரிந்துள்ள அவர்தம் பெண்ணுலகமும். வெறியாடல் பெண்களைச் சார்ந்து பெண் களுக்காகப் பெண்களால் நிகழ்த்தப்படும் ஒரு சடங்கு. வெறியாடலின் பிரதானமாக அமைவது வேலன். பெரும்பாலும் செவிலித்தாயும், நற்றாயும் தலைவியின் மெலிவுகண்டு அதற்கான காரணத்தை ஆராய்வதற்காக வெறியாட்டினை ஏற்பாடு செய்வர். நிச்சயமாக இது பெண்களுக்கு மிகுந்த துன்பம் தருகின்ற நிகழ்வாகவே இருந்துள்ளது. அதனால்தான் வெறியாடலுக்கு முன்பு அது நடைபெறாமல் நிறுத்தும்பொருட்டு தோழி அறத்தோடு நிற்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. முன்னர்க் குறித்தபடி வெறியாடல் குறித்த பதிவுகள் எட்டுத் தொகையில் பரவலாகக் காணப்படுகின்றன. இப்பதிவு களைக் கீழ்க்கண்ட நிலைகளில் தொகுக்கலாம்.

தலைவன் சிறைப்புறமாக இருக்கும்போது தோழி தலைவிக்கு வெறியாடல் நிகழவிருப் பதைக் கூறி வரைவிற்கு விரைவுபடுத்துதல், வெறியாடலினால் தலைவிக்கு நிகழ்ந்த துன்பத்தைத் தலைவன் கேட்குமாறு கூறுதல். வெறியாடலின் போது

வேலனிடம் கூறுவது போல் செவிலிக்கும் நற்றாய்க்கும் தோழி தலைவியின் உண்மைநிலையினை உணர்த்துவது.

தலைவி தலைவனோடு ஏற்பட்ட உறவினால் தான் வெறிகளத்திற்குச் செல்ல வேண்டியிருப்பதையும், வெறியாடலினால் தனக்கு நேர்ந்த துன்பத்தையும் பதிவு செய்தல். வரைவிற்கு விரைவு படுத்துதல் என்கிற நிலையில் வெறியாடல் என்னும் நிகழ்வு சங்கப் பாடல்களில் முக்கிய இடத்தினைப் பெற்றிருக்கின்றது.

கட்டுவிச்சியும் வேலனும் வேம்பினது நாற்ற முடைய பசிய இலையுடன் நீலப்பூக்களைச் சூடி, பாண்டியனுடைய பொதிய மலையில் அடைதற் கரிய உச்சியினின்று ஆரவாரித்து வருதலையுடை அருவி ஒலிபோல, ஒலிக்கும் சீரையுடைய இனிய வாச்சியங்கள் ஒலிக்க, கை யால் வணங்கி, அச்சம் தோன்றும் தலைமையை யுடைய முருகனை மனைக்கண் வருவித்து அவனது கடம்பினையும் களிற்றினையும் பாடி, பனந்தோட்டினையும் கடப்ப மாலையையும் கையிற்கொண்டணிந்து இர வெல்லாம் ஆடினர். (எழுப்பன்றி நாகன் குமரனார், அகம்.138)

கடம்பின் கொடியினைக் கட்டி, மாலை சூட்டி, பல்வேறு குரலை உடையனவாகிய தாளத்தின் வழிப்படும் ஒரு தூக்கினையுடைய இனிய வாச்சியங் களைக் கொண்டு, காட்டிற் பொருந்திய நெடிய முருகனைப் பாடும் பாட்டிற்குப் பொருந்த வெறியாட்டுச் செய்யும் பெரிய களம் சிறப்புற மெல்ல ஆடுதல் (கபிலர், அகம். 382)

சங்க இலக்கியத்தில் பரவலாக அறியப்பட்ட வெறியாடல் தொடர்பான பதிவு தொல் இலக்கணப் பனுவலான தொல்காப்பியத்தில் மூன்று இடங்களில் மட்டுமே உள்ளது. வெறியாடல் குறித்த விளக்கங்களை உரைகாரர்களே தருகின்றனர். நச்சினார்க்கினியர் புறத்திணையியலில் இடம்பெற்றுள்ள நூற்பாவிற்கும் களவியலில் இடம்பெற்றுள்ள நூற்பாவிற்கும் காமக் கண்ணியாரின் பாடலையே சான்றாகக் காட்டுகின்றார். இரண்டு நிலைகளில் அச்சான்றுகள் அமைந்திருக் கின்றன. 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்' (தொல்.புறத்.60) என்ற நூற்பாவின் உரையில், வேலனாடுதல் அகத்திணைக்குச் சிறந்தது. உதாரணம்:

***' அணங்குடை நெடுவரை யுச்சியி னிழிதருங்***
***கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்...' (அகம்.22)***

இவற்றுட் சேயோன் கருப்பொருளாக மைவரை யுலகத்துக் கூதிர்யாமம் பொழுதாகச் சிறப்பறியும் வேலன் ஆடுதலின், வெறியாடிய காந்தள் அகத்திற்கு வந்தது. (தொல்.புறம். நச்.163) அக இலக்கியத்தில் வேலனாடுதல் என்பது சிறந்த பகுதியாக நச்சினார்க்கினியரால் கருதப்பட்டிருக்கின்றது. மேலும் களவியலில் தலைவி கூற்று நிகழும் இடங் களைச் சுட்டும் நூற்பாவில் இரண்டு இடங்களில் காமக் கண்ணியாரின் பாடல்களைச் சான்று காட்டுகின்றார். 'பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்' என்ற பகுதிக்கு, தலைவனால் தோன்றிய நோயும் பசலையும் முருகனால் தீர்ந்த தென்று அவன் கேட்பிற் கற்பிற்குப் பழியாமாதலிற் பழி யென்றார். உதாரணம்

அணங்குடை நெடுவரை யுச்சியி னிழிதருங்...

இதனுட் பழி தீர அவன் வந்து உயிர்தளிப்ப முயங்கி நக்க நிலையைத் தோழிக்குத் தலைவி கூறியவாறு காண்க. (தொல்.களவு.நச்.411) அடுத்ததாக 'வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்' என்னும் பகுதிக்கு, தலைவி வேறுபாடு எற்றினானாயிற் றென்று வேலனை வினாய் வெறியாட்டு எடுத்துழி தலைவி அஞ்சும் அச்சத்தின் கண்ணும் அது பண்டேயுந் தன் பரத்தமையான் நெகிழ்ந்தொழுகுவான் இன்று நம் ஆற்றாமைக்கு மருந்து பிறிதுமுண்டென்றறியின் வரை நீடுமென்று அஞ்சுதல். உதாரணம்:

***'பனிவரை நிவந்த பயங்கெழு கவாஅற்...'***

இன்னவாக்கி நிறுத்த எவ்வம் என்பது அவன்பயிற் பரத்தைமை. உயிர்வாழ்தல் அரிது என்பது தன்வயினுரிமை. அவை வெறியஞ்சியவழி நிகழ்ந்தன. (தொல். களவு. நச்.411)

சங்க இலக்கியத் தொகுப்பாளர்களுக்குப் பிறகு காமக்கண்ணியாரின் பாடலுக்குப் பொருளுரைத்தவராக நச்சினார்க்கினியரைக் கொள்ளமுடியும். முதல்நிலையில் அகப்பாடல்களில் வேலனாடுதல் சிறப்பு என்ற நிலையில் வெறியாடலுக்கான சான்றாகக் காமக்கண்ணியாரின் பாடலைக் காட்டிய நச்சர் இரண்டாம் நிலையில் வெறியாடலின் பொருட்டு தலைவி அச்சம் கொண்ட நிகழ்விற்கான சான்றுப் பாடலாகக் கொள்கிறார். இவ்வுரை மரபினைத் தாண்டி காமக்கண்ணியாரின் பாடல்கள் சில அர்த்தப் புலப்பாட்டினைக் கொண்டிருக்கின்றன.

நச்சர் எடுத்துக் காட்டியுள்ள அகநானூற்றின் இரண்டு (அகம்.22,98) பாடல்களோடு நற்றிணையில் ஒரு (நற்.268) பாடலென மூன்று பாடல்கள் காமக் கண்ணியாரின் பாடல்களாகக் கிடைக்கின்றன. இம்மூன்று பாடல்களுமே வெறியாடலுக்குட்படுத்தப் பட்ட தலைவியின் கூற்றுகளாக அமைந்தவை. காமக்கண்ணியார் காட்சிப்படுத்தியுள்ள வெறியாடல்,

***களநன் கிழைத்துக் கண்ணி சூட்டி***
***வளநகர் சிலம்பப் பாடிப லிகொடுத்***
***துருவ செந்தினை குருதியடு தூஉய***
***முருகாற்றுப் படுத்த புருகெழு நடுநா... (அகம். 22)***

பிற புலவர்கள் காட்சிப்படுத்தியுள்ள வெறியாடலி லிருந்து பெரிதும் மாறுபடவில்லை. வெறியாடலுக் குரிய களம், மாலை, பலி, செந்தினை என்று முன்னர்க் குறிப்பிட்ட சடங்குகளே இப்பாடலிலும் இடம் பெற்றுள்ளன. ஆனால் இச்சடங்கினால் ஏற்படுகின்ற துன்பம் இப்பாடலில் பிரதானப்படவில்லை. மாறாக, இச்சடங்கு தலைவிக்கு நகைப்பிற்குரியதொன்றாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே காமக்கண்ணியார் பிற புலவர்களிலிருந்து மாறுபடுகிறார்.

பொதுவாகச் சங்கப் பெண்பாற் புலவர்கள் தங்கள் காமத்தை அழகியலோடு வெளிப்படுத்தியுள்ளமை யினைக் காணமுடியும். காமக்கண்ணியார், பிற புலவர்களால் தன்னிரக்கத்தோடும் துயரத்தோடும் நோக்கப்பட்ட வெறியாடல் சடங்கினைத் தனது காமத்திற்கான அழகியல் வெளிப்பாடாகக் கட்டமைத் துள்ளார். அப்பாடலடிகள் வருமாறு,

முருகாற்றுப் படுத்த புருகெழு நடுநா

***ளார நாற வருவிடர்த் ததைந்த***
***சாரற் பல்பூ வண்டுபடச் சூடிக்***
***களிற்றிரை தெரீஇய பார்வ லொதுக்கி***
***னொளித்தியங்கு மரபின் வயப்புலி போல***
***நன்மனை நெடுநகர்க் காவல ரறியாமைத்***
***தன்னசை யுள்ளத்து நந்நசை வாய்ப்ப***
***வின்னுயிர் குழைய முயங்குதொறு மெய்ம்மலிந்து***
***நக்கனெ னல்லனோ யானே யெய்தந்***
***நோய்தணி காதலர் வரவீண்***
***டேதில் வேலற் குலந்தமை கண்டே (அகம்.22)***

பிற புலவர்களின் பாடல்களில் களவு வாழ்க்கை யினால் நேர்ந்த துயரமாக, வெறியாடலை எதிர் கொண்ட தலைவியரைக் காணமுடியும். ஆனால் காமக் கண்ணியாரோ வெறியாடல் நிகழ்ந்த அன்று சந்தனம் மணம் வீச, பக்க மலையில் உள்ள அரிய முழைஞ்சுகளிற் செறிந்த பல பூக்களை வண்டுமொய்த்திட சூடியும், களிறாகிய இரையைத் தெரிதற்

பொருட்டு ஒதுங்கிய பார்வையடு மறைந்து இயங்கும் இயல்பினையுடைய வலிய புலியினைப் போல, நமது நல்ல மனையின் கண்ணுள்ள நெடிய இல்லின் காவலாளரும் அறியா வண்ணம், தான் மெலிதற்கு ஏதுவாய இந்நோயைத் தணித்தற்குரிய காதலர்வந்து, தன்னை நச்சுதலை யுடைய உள்ளத்தின் விருப்பம் நிறைவேறும்படி, இனிய உயிர்குழையும்படி முயங்குந்தோறும், இந்நோய்க்குச் சற்றும் தொடர்பில்லாத வேலனுக்கு வெறியெடுத்ததை நினைத்து உடல்பூரிக்கச் சிரித்த தலைவியைக் காட்டுகிறார். இதனைக் காமக்கண்ணியாரின் கூற்றாகக் கொள்ளவேண்டும். தான் மேற்கொண்ட காமம், களவு. அது தனக்கான வெளி. அதில் எந்தக் குற்ற உணர்வும், துயரநிலையும் தனக்கில்லை. அந்தக் களவானது எத்தகைய இடையீடு ஏற்படினும் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதையே இப்பாடலின் மூலம் உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

தோழிக்குரிய கூற்றுகளில் செலவழுங்குவித்தல் துறையும் ஒன்றாக அமைந்துள்ளது. செலவழுங்குவித்தல் துறையில் தோழி தலைவியின் நிலையை எடுத்துக் கூறித் தலைவனை செலவழுங்குவித்ததாக 50 பாடல்களும், தலைவி தன்னுடைய நிலையை தலைவனிடம் நேரடியாக எடுத்துக் கூறிச் செலவழுங்குவித்ததாக இரு பாடல்களும் (கலி.6,20) தலைவன் தன்னுடைய தன் நிலையைத் தன் நெஞ்சிடம் கூறிச் செலவழுங்குவித்ததாக ஒரு பாடலும் (அகநா.77) பயின்று வந்துள்ளன.

பாலை வழியின் கொடுமையைக் கூறியும், பாலை வழியின் துன்பம் இயல்பாகவே தலைவனைத் தடுக்கும் என்றும், பொருள் காரணமாகத் தலைவியை மறக்காது இருத்தல் வேண்டுமென்றும், தலைவனிடம் தலைவியின் உள்ள இயல்பை எடுத்துக் கூறியும், இனிய துணையான தலைவியைப் பிரியாது இருப்பாயாக! என்று தேற்றியும், பாலை வழியில் காணப்படும் விலங்குகளின் அன்பைச் சுட்டிக் கூறியும், வேனிற்கால கொடுமையும் பாலையின் வறுமையையும் கூறித் தடுத்தும், தலைவியது தனிமைக் கொடுமையைப் பாலையின் அரிய காடு என்று கூறியும், தலைவன் பிரிவால் தலைவனுக்குப் பாலை ஓர் அரிய காடு ஆகும் என்றும், பாலையின் கொடிய வழியில் தலைவியையும் அழைத்துச் சென்றால் இனிமையாக அமையும் என்றும், விருந்தினர்களைத் தலைவனும், தலைவியும், சேர்ந்து உபசரித்தல் வேண்டுமென்றும், தலைவியின் அழகைச் சிதைக்காததே அழியாச்செல்வம் என்றும், மகனைக் கண்டு மகிழ்வதை விடச் சிறந்த பொருள் எதுவும் இல்லை என்று கூறியும், கார் பருவத்தில் பொருள் தேடச்செல்வது சிறப்பல்ல என்றும், தலைவன் தேடும் பொருள் தலைவியின் உயிரை மீட்டுத்தராது என்றும், நாளும் இளமையும் தலைவிக்காகக் காத்திருக்காது என்றும், தலைவனுக்கு நிலையான பொருள் தலைவியே என்றும், தலைவனை நொடிப்பொழுதில் பிரியாதவள் தலைவி, நீ பிரிந்தால் என்ன ஆகுமே? என்று கூறியும், புறப்பொருளை விரும்பி அகப்பொருளை மறந்தது ஏன்? எனவும், தலைவன் பொருள் தேடி வரும் முன்னே தலைவி இறந்து விடுவாள் என்றும், தலைவனின் பிரிவைக் காட்டிலும் செல்லும் வழியின் கொடுமையை எண்ணி, தலைவி மிக வருந்துவாள் எனவும், துணையைப் பிரிந்து ஈட்டும் பொருளால் பயன் ஏதுமில்லை எனவும், வழி அருமையைத் தலைவனுக்கு உணர்த்தியும், பாலை வழித்துயரை விடத் தலைவியின் துன்பநிலை ஆற்றாதது என்றும், தலைவியிடம் மெய்ச்சொற்களை நயம்படக் கூறியதைச் சுட்டித் தடுத்தும், தோழி தலைவனைச் செலவழுங்குவித்துள்ளதைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

**முடிவுரை**

தலைவனைத் தோழி மட்டும் செலவழுங்குவிப்பதில்லை. தலைவியும் நேரடியாகத் தலைவனின் பிரிவினைத் தவிர்க்க முயற்சி செய்வாள். தலைவனை எதிர் நின்று நேருக்கு நேராக சொற்களைக் கூறிச் செலவினைத் தவிர்க்க சொல்ல இயலாத தலைவி, தோழியிடம் கூறுவதுபோல செலவழுங்குவித்துள்ளாள். இத்தகைய பாடல்கள் சங்க அக இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன.

தோழி தலைவி இவர்களைத் தவிரத் தலைவனும் தன் நெஞ்சிற்குக் கூறித் தானே செலவழுங்கியதைக் காணமுடிகிறது. தலைவியைப் பிரிந்து சென்றால் சென்ற இடத்தில் அவளின் நினைவு வரும். அதனால் தலைவியை விட்டுப் பிரிய மனமின்றி தனது செலவைத் தானே தவிர்க்கத் துணிந்த தலைவனையும் காணமுடிகிறது.

தோழி, தலைவி, தலைவன்(நெஞ்சு) ஆகிய மூன்று அக மாந்தர்களுமே கூற்றுக்கு உரியவராகின்றனர். தோழி நேரிடையாகவும், தலைவி நேரிடையாகவும் - தோழி வாயிலாகவும் (கலி.6,20) தலைவனைச் செலவழுங்குவித்துள்ளதையும், தலைவன் தன் நெஞ்சிற்குத் தானே பேசிச் (அகநா.77) செலவழுங்குவித்துள்ளதையும் இவ்வியல் உறுதி செய்துள்ளது.

**துணை}ற்பட்டியல்**


1. ரா.ராமகிருஷ்ணன்இ தகடூர் வரலாறு பண்பாடும்இ ப.107
2. கு.வை. பாலசுப்பிரமணியன்இ சங்க இலக்கியத்தில் புறப்பொருள்இப.99
3. நா.பாலுசாமிஇ வாழ்வியல் களஞ்சியம்இ ப.75
4. குழந்தைஇ குறல் உரைக்களஞ்சியம்இ ப.56
5. வெள்ளைவாரணர்இ தொல்காப்பியம் ப. 67
6. க.கைலாசபதிஇ பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடுஇ ப. 34
7. மொ.அ.துரை அரங்கசாமி. சங்ககால சிறப்பும் பெயர்கள்இப.363
8. அ.ம. பரிமளம்இ பதிற்றுப்பத்துஇ ப.275
9. ராஜ்கவுதமன்இ பதிற்றுப்பத்து ஐங்குறுநூறு சில அவதானிப்புகள்இ ப.37
10. பெ.மாதையன்இ தமிழ் செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும்இ ப.26